TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

13-10-86

செய்தி ஆசிரியர்,

...........

சென்னை.

**சிங்கள இராணுவத்தினருடனான நேரடி மோதலில் தளபதி விக்டர் வீரமரணம்!**

**28 சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.**

---

நேற்று மன்னார் மாவட்டத்தில் அடம்பன் எனும் கிராமத்தில் தமிழீழவிடுதலைப் புலிகளின் கெரில்லா அணி ஒன்றிற்கும், சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் நடைபெற்ற கடும் சண்டையில் மன்னார் பிராந்தியத் தளபதியான லெப்ரினன்ட் கேர்னல் விக்டர் (மருசலின் பியூஸ்லஸ்) வீரமரணமடைந்தார். விடுதலைப் புலிகளின் அணியொன்றிற்குத் தலைமைதாங்கிச் சென்று கடும் போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கையில் எதிரியின் குண்டுபட்டு களத்தில் வீர மரணமானார். 23 வயதுடைய விக்டர் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், மத்திய குழு உறுப்பினருமாவார்.

இவர், 1983 ஜூலை திருநெல்வேலித் தாக்குதல், மன்னார் பொலிஸ்நிலையத் தாக்குதல் உட்பட ஏராளமான, விடுதலைப் புலிகளின் வெற்றிகரமான தாக்குதல்களின்போது முன்நின்று போரிட்டவரானவார். இவர் மன்னார் மக்களின் அன்புக்கும் பாத்திரமாகஇருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் களத்தில் போரிட்ட இன்னொரு விடுதலைப் புலி வீரரான ரோம்ஸ் என்பவரும் வீரமரணமடைந்தார். இறந்த இவ்வீரர்களுக்கு எமது வீர அஞ்சலியை செலுத்துகின்றோம்.

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து பொதுமக்களைத் தாக்கும்பொருட்டு காட்டுப் பாதை வழியாக இராணுவம் 6மைல் தொலைவிலுள்ள அடம்பன் என்ற இடத்துக்கு வந்தபோது நேற்று அதிகாலை அவர்களைத் தடுத்துநிறுத்தி தமிழீழவிடுதலைப் புலிகள் கடும் சமரில் ஈடுபட்டனர். இதே கிராமத்தில் 13-7-86 அன்று சிங்கள இராணுவம் 30 பொதுமக்களைக் கொன்றொழித்தது நினைவிருக்கலாம். விடுதலைப் புலிகளின் வீராவேசமான தாக்குதலைச் சிங்கள இராணுவம் பெரும் இழப்புகளுக்கு உள்ளாகியது. ஒரு லெப்ரினன்ட், ஒரு கெலிகாப்டர் பைலட் உட்பட 28 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஒரு இராணுவச் சிப்பாய் உயிருடன் பிடிபட்டுள்ளனர். கொல்லப்பட்ட இராணுவத்தினரது உடல்களில் 11 உடல்களைத் தமிழீழ விடுதலைப்புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் ஒரு ஆர்.பி.ஜி, ஒரு 60 எம்.எம். மோட்டார், 13 ஏ.கே 47 ரைபிள்கள், 2 வோக்கி ரோக்கி, மோட்டார் மற்றும் ஆர்.பி.ஜி செல்கள் உட்பட பெருந்தொகையான துப்பாக்கிக் குண்டுகள், 44 ரவைக் கூடுகள், சீருடைகள், உணவுப் பொருட்களும் என்பனவும் எம்மால் கைப்பற்றப்பட்டன.

எமது தாக்குதலைச் சமாளிக்கமுடியாத தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த சிங்கள இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கி ஓடினர். இவர்களுக்கு உதவியாக முருங்கன் இராணுவ முகாமிலிருந்து வந்த சிங்கள இராணுவத்தினரை இடைமறித்து உயிலங்குளம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் கடும் சமரில் ஈடுபட்டுள்ளனர். கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி இன்று காலை 9.30 மணியளவில் தள்ளாடி இராணுவத்தினருடன் எமது வீரர்கள் மடுரோட் என்னும் இடத்தில் கடுஞ்சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

(எஸ்.சுப்பிரமணியம்)
அரசியற் பிரிவு,
தமிழீழ விடுதலைப் புலிகள்.


**LTTE** (UK Branch)
42 ALBANY STREET
LONDON NW1 4EA
01 387 4739